# பிங்கிரிய பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிங்கிரிய பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 1,446,860 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கும் போது அப்பெறுமானம் மீளவும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கையிலுள்ள இருப்பு மீதிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் ரூபா 1,446,860 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்பான ரூபா 196,779 தொகை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியளவில் செலுத்தவேண்டிய அளவான ரூபா 4,206,939 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவிலலை.

(இ) மூலதனப் பெறுவனவுகளின் கீழ் கிடைத்திருந்த ரூபா 11,315,462 தொகை வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அதில் முன்னைய வருடங்களுக்குரிய தொகை இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய ரூபா 1,500,000 தொகை மூலதனப் பெறுவனவுகளின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 47,880,760 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,499,269 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,257,241 ஆக இருந்தது.

### 2.2 தீர்க்கப்படாத கணக்குகள்

(அ) வருமானக் கடன்பட்டோரில் அரசாங்க நிதி மற்றும் கணக்குப் பணிப்பாளராக ரூபா 200,000 தொகையும் உள்ளூராட்சி ஆணையாளராக (வடமேல்) ரூபா 8,038,934 தொகையும் நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டது.

(ஆ) நானாவிதக் கடன்கொடுத்தோரில் காணப்பட்ட பல வருடகாலமாக கொண்டுவரப்படுகின்ற உடுபத்தாவ பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 2,435,693 மீதியும், நீர் செயற்திட்டத்தின் கடன் கொடுத்தோராகக் காணப்பட்ட

ரூபா 310,132 தொகையான மீதியும் மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 790 | 333 | 313 |
| (ii) | வாடகை | 8,133 | 10,633 | 344 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,110 | 1,320 | 123 |
| (iv) | ஏனைய வருமானம் | 44,552 | 33,810 | 19,240 |

### 2.3.2 ஆதன வரி

ஆதன வரி மற்றும் ஏக்கர் வரிகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 106,536 தொகை மற்றும் ரூபா 205,784 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.3 வாடகை

(அ) வருடாந்தம் சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் 03 இறைச்சிக் கடைகளில் ரூபா 441,115 தொகை நிலுவையாகக்

காணப்பட்டது. இதில் ரூபா 241,038 தொகைக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 2 கடைகளில் மேலும் ரூபா 100,722 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(ஆ) பிங்கிரிய வியாபாரத் தொகுதியில் 2 கடைகளில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் 2009 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 55,905 தொகை மாத்திரம் வாடகை நிலுவையாயகக் காணப்பட்டது.

### 2.3.4 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோட்டலின் புரள்வின் 1 சதவீதத்தினை விஞ்சாத கட்டணம் அறவிட முடியுமாக இருந்த போதிலும் சபையினால் அவ்வாறு இனங்காணப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து வருடாந்தம் ரூபா 3,000 கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரிகளை அறவிடக்கூடிய இடங்களை இனங்காண்பதற்கான மெய்மையாய்வு ஒன்று 2011 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த மெய்மையாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட 1357 இடங்களில் 887 இடங்களுக்காக மாத்திரம் பணம் அறவிடப்பட்டுக் கொண்டிருந்ததுடன் எஞ்சிய இடங்கள் தொடர்பாக ஆவணப்படுத்தல்கள் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 63 ஆம் விதியின் ஏற்பாடுகளின் படி நிலுவைப்பட்டியல் தயாரிப்பதற்கோ அல்லது நிலுவையை அறவீடு செய்வதற்கோ 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) மற்றும் 150(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 தொலைபேசிக் கமிஞ்ஞைக் கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசி சமிக்ஞைக் கோபுரங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் செயன்முறைக் கட்டணமாக ரூபா 100 படி ரூபா 100,000 அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசி சமிக்ஞைக் கோபுரங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவற்றை இனங்கண்டு

ஆவணப்படுத்துவதற்கோ அல்லது அதன் அடிப்படையில் கட்டணத்தை அறவிடுவதற்கோ சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**2.3.6 வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் முச்சக்கர வண்டிக் கட்டணம் அறவிடுவதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியான மெய்மையாய்வை மேற்கொண்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கு அல்லது நிறுத்தி வைக்கப்படும் இடங்கள் முறைப்படுத்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முறையே 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் 22 மற்றும் 24 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டு ரூபா 6,700 தொகை மற்றும் ரூபா 6,400 தொகையான வருமானம் மாத்திரம் பெறப்பட்டிருந்தன.

**2.3.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 19,239,507 ஆகும்.

**2.3.8 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபையினால் பேணப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திர விநியோகித்தல் பதிவேட்டில் உரிய அனுமதிப்பத்திரம் எந்த தொழில்களுக்காக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை. அவ்வாறே அப்பதிவேட்டின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் சுற்றாடல் அனுமதிப்பத்திர விண்ணப்பத்திரங்கள் முறையே 251 மற்றும் 198 ஆகக் காணப்பட்டதுடன் அதில் அனுமதிப்பத்திரங்கள் முறையே 121 இடங்கள் மற்றும் 60 இடங்களுக்காக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத எஞ்சிய 268 இடங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவோ அல்லது அந்த இடங்களில் சட்டரீயற்ற வியாபாரங்கள் நடாத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக கண்டறியப்படவோ இல்லை.

**2.3.9 வினோத வரி**

வினோத வரி அறவிடுவதற்காக பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் களியாட்ட நிகழ்ச்சிகள் போன்ற சந்தர்ப்பங்களின் போது நுழைவுச்சீட்டு முத்திரை குத்தப்பட்டு வைப்புப்பணம் பெறப்பட்டிருந்ததுடன் உரிய களியாட்டங்கள் சபையினால் பரீசீலனை செய்யப்பட்டு அறிக்கை தயாரிப்பதற்கோ அல்லது விண்ணப்பதாரிகளில் விநியோகிக்கப்பட்ட நுழைவுச்சீட்டுக்கள் தொடர்பான அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் வினோத வரி அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 55,000 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 218 ஆவது விதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 44,849,371 ஆக இருந்தது.

**2.6 மனித வள முகாமைத்துவம்**

சபையின் இரண்டு வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் ஒரு பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக தரகு அடிப்படையில் நபர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். சபையில் வைத்திய உத்தியோகத்தர் பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக நாட்சம்பள அடிப்படையில் வைத்தியர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

**2.7 செயற்பாட்டு செயற்திறினின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,206,939 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 16,398 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 4 வாராந்த சந்தைகளில் சந்தைக் கட்டணங்கள் சபையினால் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அக்கட்டண அறவீடுகளுக்குரிய வியாபாரங்களுக்காக சந்தையில் வசதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு மற்றும் அதற்காக அறவிட வேண்டிய கட்டணங்களை உள்ளடக்கிய திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பொது நிதியத்தின் கீழ் 63 வேலைகளுக்காக ரூபா 12,754,851 தொகையான நிதியேற்பாட்டு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,352,717 தொகையான 27 வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்